REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 11 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :140 சித்திரை முதலாம் நாள் செவ்வாய்க்கிழமை 14 ஏப்ரல் 2020 வள்ளுவர் ஆண்டு 2051


# கொரோனா பிடியில் 217 பேர்

## நேற்றும் எழுவர் இனங்காணப்பட்டனர்

கொழும்பு, ஏப்.14

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை நேற்று 217 ஆக உயர்ந்தது. நேற்றுமுன்தினம் 210 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருந்த நிலையில் நேற்று மேலும் 7 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று அடையாளம் காணப்பட்டவர்கள் புனானை தனிமைப்படுத்தல் நிலையத்தில் கட்டாயத் தனிப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந் 02




# அமைதியான புத்தாண்டு!



யாழ்ப்பாணம், ஏப்.14

மலர்ந்திருக்கும் சார்வரி தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு இந்து ஆலயங்களில் நேற்றிரவு விசேட பூஜைகள் அமைதியான முறையில் நடைபெற்றன. ஆலயங்களுக்கு வருதை தவிர்த்து, மக்கள் வீடுகளிலேயே அமைதியான முறையில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர். 02

# கருத்துச் சுதந்திரத்தை நசுக்குகின்றது அரசு!

## 32 சிவில் அமைப்புக்கள் இணைந்து குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்ரல் 14

தற்போது நாட்டில் கொரோனா தொற்றுக் காணப்படும் நிலையில், அதைக் காரணம் காட்டி அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு 32 சிவில் அமைப்புக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் என்ற பெயரில் நாட்டு மக்களின் கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்க அரசு முயற்சிக்கின்றது. அதை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று தெரிவித்துள்ள அந்த அமைப்புக்கள், ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவுக்கும் நேற்றுக் கடிதம் அனுப்பியுள்ளன. 02

## மயிலிட்டி வாசி லண்டனில் சாவு

யாழ்ப்பாணம், ஏப்.14

கொரோனா அறிகுறியுடன் லண்டன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் மயிலிட்டியைச் சேர்ந்த, மூன்று பிள்ளைகளின் தந்தை 02

## யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு தொடரும்

கொழும்பு,ஏப்.14

கொரோனா தொற்றுப் பரவலில் இடர் வலயங்களாக இனம் காணப்பட்டுள்ள கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில், தற்போது அமுலில் இருக்கும் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. 02




"எல்லாருக்கும் இனிய கொரோனா.. சொறி... சார்வரி புத்தாண்டு வாழ்த்துக்களுங்கோ"

## ஆராதனைக்குச் சென்ற 37 பேர் நேற்று விடுவிப்பு

கொடிகாமம் ஏப்ரல் 14

அரியாலை பிலதெல்பியா தேவாலய ஆராதனையில் கலந்துகொண்டதால் கொரோனா, தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் வீடுகளில் தனிமைப் படுத்தப்பட்டிருந்த 37 பேருக்கு, அவர்களின் தனிமைப்படுத்தல் காலம் நேற்றுடன் முடிவடைந்தது. இதனையடுத்து அவர்களுக்கு சுகாதாரப் பகுதியால் 02



யாழ்.போதனாவில்

## மருத்துவ பணியில் ஈடுபடுவோரின் அர்ப்பணிப்புக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், ஏப்.14

சித்திரைப் புத்தாண்டு நேற்றிரவு பிறந்துள்ள நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மருத்துவர்களும், தாதியர்களும், மருத்துவமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் விடுமுறை இல்லாது தொடர்ச்சியான மருத்துவப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். 03

## தாவடிக்கு மீட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.14

யாழ்ப்பாணத்தில் முதலாவதாக அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளியின் கிராமமான தாவடி நேற்றுக் காலை பாது 03

## வீட்டிலிருந்து பணி புரியும் காலம் நீடிப்பு

கொழும்பு,ஏப்.14

வீட்டில் இருந்து பணி புரியும் காலம் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டு 02

## மந்திகை மருத்துவமனை பொறுப்பதிகாரி விசாரணைக்காக இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 14

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் அத்தியட்சகர் குகதாசனுக்கு எதிரான விசாரணைகளை ஆரம்பிக்குமாறும் அதுவரை அவரை, யாழ்ப்பாணம் 02

## 17 பேருக்குச் சோதனை எவருக்கும் தொற்றில்லை

யாழ்ப்பாணம், ஏப். 14

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நேற்று 17 மாதிரிகள் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டன. அவர்கள் எவருக்கும் 02

## தாராபுரம் விடுவிப்பு

மன்னார், ஏப். 14

மன்னார் மாவட்டத்தில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்த தாராபுரம் கிராமம் நேற்று மதியத்திலிருந்து விடு 03

## அமைதியான...

சார்வரி புத்தாண்டானது நேற்று இரவு 7.26மணிக்குமலர்ந்திருந்தது. கொரோனா தாக்கம் காரணமாக ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளதால், மக்கள் வீடுகளிலேயே அமைதியான முறையில் புத்தாண்டைக் கொண்டாடினர். ஆலயங்களில், குறைந்தளவிலான மக்களுடன் சமூக இடைவெளிகள் பேணப்பட்டு பொலிஸார் மற்றும் சுகாதார துறையினரின் அறிவுறுத்தலுக்கமைவாக வழிபாடுகள் இடம்பெற்றன.

ஆலயங்களில் மிகக் குறைவான பக்தர்களோடு விசேட தீப ஆராதனைகளுடன் புதுவருட வழிபாடுகள் இடம்பெற்றன. இவற்றில் கலந்து கொண்டோர் அமைதியாக தமக்குள் வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொண்டனர். (ப-18)

## கொரோனா...

தவர்கள் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இவர்கள் பேருவளையில் அடையாளம் காணப்பட்ட கொறொனா வைரஸ் தொற்றாளர்களுடன் பழகியவர்களாவர்.

அதேவேளை, நேற்றுமுன்தினம் 12 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்தனர். அவர்களில் 8 பேர் பேருவளைப் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட கொறொனோ தொற்றாளர்களுடன் பழகியவர்கள் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் 154 பேர் தற்போது மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகின்றனர். கொரோனா தொற்றுக்குள்ளான 56 பேர் குணமடைந்துள்ளனர். தொற்றுக்குள்ளான 7 பேர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளனர்.

கொரோனா தொற்றுள்ளுக்காகியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் தற்போது 17 பேர் மருத்துவமனைகளில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (எ-22)

## யாழ்ப்பாணத்தில்...

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 6 மணிக்குத் தளர்த்தப்படும் ஊரடங்குச் சட்டம் அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு மீண்டும் அமுல்படுத்தப்படும்.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்காக பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் உள்ளிட்ட நடைமுறைகள் மக்களின் நலனுக்காகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதனால் ஏற்படும் கஷ்டங்களைப் புரிந்துணர்வுடனும், பொறுப்புடனும் பொறுத்துக்கொள்ளுமாறு அரசாங்கம் மக்களிடம் கேட்டுள்ளது.

பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது, அத்தியாவசிய பொருள்களுடன் மட்டுப்படுத்திக் கொள்ளுமாறும், தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும் புத்தாண்டுக் காலப்பகுதியில் சம்பிரதாயங்கள் மற்றும் தொடர்புகளைக் குடும்ப உறுப்பினர்களுடன் மட்டுப்படுத்திக் கொள்ளுமாறும் வேண்டிக் கொள்ளப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய பணிகளுக்காக மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளை வினைத்திறனாகப் பேணும் வகையில் நடைமுறையில் உள்ள முறைமைகளைத் துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு எதிராகச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும். ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள காலப் பகுதியில் மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் வேறு பொருள்களை வீடுகளில் இருந்தே பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தொடர்ச்சியாக வழங்கலை மேற்கொள்ள அரசாங்கம் அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

எந்த மாவட்டத்திலாயினும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் சிறு தேயிலை தோட்டங்கள், ஏற்றுமதி பயிர்கள் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட மக்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கண்டி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாகவே கருதப்படும். எவரும் இந்த கிராமங்களுக்கு உள்வருவதோ அல்லது வெளியேறுவதோ மறு அறிவித்தல் வரை முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது. என்றுள்ளது. (க-20)

## மயிலிட்டி...

யான சின்னையா அமிர்தலிங்கம் (வயது 67) என்பவர் நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மனைவி மற்றும் இரண்டு பிள்ளை களுடன் லண்டனில் வசித்துவந்த அமிர்தலிங்கம் காய்ச்சலால் அவதிப்பட்டு, மூச்சுத்திணறல் ஏற்பட்டதையடுத்து ஒரு வாரத்துக்கு முன்னர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இதையடுத்து அவரது குடும்ப த்தவர்களை 14 நாள்கள் சுய தனிமைப்படுத்தலில் இருக்குமாறு மருத்துவமனை தரப்பில் வலியுறுத்தப்பட்டிருந்தது. அமிர்தலிங்கத்தின் உடல்நிலை மிகவும் மோசமடைந்திருப்பதாகவும், நுரையீரல் மற்றும் சிறுநீரகங்கள் செயலிழந்து வருவதாகவும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு மருத்துவமனை தரப்பில் இருந்து குடும்பத்தாருக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது. அவயங்கள் செயலிழந்த நிலையில் இருந்த அமிர்தலிங்கத்தைப் பார்வையிட நேற்று அதிகாலை குடும்பத்தினர் அனுமதிக்கப்பட்டிருந்தனர். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்றுத் திங்கட்கிழமை லண்டன் நேரம் அதிகாலை 3 மணியளவில் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## வீட்டிலிருந்து...

ள்ளது என்று அரசு அறிவித்துள்ளது.

அரச மற்றும் தனியார் துறையினருக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்து பணி புரியும் காலம் விடுமுறையாகக் கணிக்கப்பட மாட்டாது. அரச மற்றும் தனியார் துறை பிரதானிகளின் அறிவுரைக்கு அமைவாக, பணியாளர்கள் முடிந்தளவு வீட்டில் இருந்தவாறு வேலை செய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரம், வங்கி, போக்குவரத்து மற்றும் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த, ஏனைய தரப்பினர் வீட்டில் இருந்து பணி புரிய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது . (க)

## ஆராதனைக்கு...

விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதோடு, படையினரின் கண்காணிப்பும் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

அரியாலை பிலதெல்பியா தேவாலய ஆராதனையில் கலந்து கொண்ட சுவிஸ் நாட்டைச் சேர்ந்த பங்குத் தந்தை ஒருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளது என்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், அந்த ஆராதனையில் கலந்து கொண்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு கொரோனாப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. நாவற்குழி, கைதடி, மட்டுவில், கச்சாய் ,அல்லாரை ஆகிய இடங்க ளில் இவ்வாறு வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் படையினரின் கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்தனர். நேற்றுடன் தனிமைப்படுத்தப்பட்ட காலம் முடிவடைந்த நிலையில் , அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். தனிமைப்படுத்தல் காலம் முடிவடைந்தமைக்கான சான்றிதழ்கள் அவர்களுக்கு நேற்றுத் திங்கட்கிழமை சுகாதாரப் பரிசோதகர் மற்றும் இராணுவத்தினரால் வழங்கப்பட்டது. (ப-159)

## கருத்துச்..

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

கொரோனாத் தொற்றை இலங்கையை விட சிறப்பாக கட்டுப்படுத்தியுள்ள நாடுகள் எந்த வகையிலும் இத்தகைய ஒடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

தங்களுக்கு நியாயமான நிவாரணம் கிடைக்கவில்லை எனக் கம்பளைப் பகுதியில் தொலுவ மக்கள் அமைதி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். அந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தமைக்காக பேராதனைப் பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளனர். அவர் கடந்த 10ஆம் திகதி கண்டி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக, அசௌகரியங்களை எதிர்நோக்கும் மக்கள் தமது கருத்துக்களை, எதிர்ப்புக்களை வெளிப்படுத்துவதற்கான உரிமை, தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகள் என்ற பெயரில் பறிக்கப்படுவதாகத் தெரிகின்றது.

கடந்த காலங்களில் சமூக வலைத்தளங்களில் கருத்துக்களை வெளியிட்ட பலர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், தொடர்ந்தும் அத்தகைய கைதுகள் இடம் பெறும் என உயர் பொலிஸ் அதிகாரிகள் ஊடகங்கள் ஊடாக பிரசித்தமாகவே அச்சுறுத்துகின்றனர்.

தொற்று நோய் பரவல் கால கட்டத்தில் நியாயமான அடிப்படைகளின் கீழ் பொதுமக்களின் சில உரிமைகள் மீறப்படுதல் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளமை தெளிவானதே. உதாரணமாக பொதுமக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கான உரிமை இவ்வாறான சந்தர்ப்பங்களில் தடுக்கப்படுவது நியாயமானதே. ஆனால் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம், எதிர்ப்பு வெளிப்படுத்தல் சுதந்திரம் ஆகியவற்றை ஒடுக்குவது மிக அபாயகரமான நிலைமையாகும்.

இது சர்வாதிகார அறிகுறிகளுடன் கூடிய ஒரு அதிகார வர்க்க அரசின் நடவடிக்கையாகும். அரசு கொடுக்கும் நிவாரணம், உரிய மக்களிடம் சென்றடைவதில்லை என்ற குற்றச்சாட்டு தற்போதும் உள்ளது. அத்தியாவசியப் பொருள்களைப் பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகளும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

அரச ஊழியர்களின் கடன் தவணைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது எனக் கூறப்பட்டாலும் அந்த வாக்குறுதி சரியாக நிறைவேற்றப்படவில்லை. மரக்கறி விவசாயிகளின் உற்பத்திகளை கொள்வனவு செய்யும் திட்டங்களிலும் பெரும் குறைபாடுகள் உள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதனால் மக்களிடையே எதிர்ப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. அரசு அவ்வாறான சந்தர்ப்பத்தில் கருத்துக்களையும் எதிர்ப்புக்களையும் ஒடுக்குவதை விடுத்து, அதற்கான காரணிகளைக் கண்டறிந்து உரிய தீர்வுகளைக் கொடுக்க வேண்டும். தமக்கு நியாயத்தைக் கோரி ஆர்ப்பாட்டம் செய்யும் மக்கள் கூட்டத்தை அரசு தனது எதிராளிகளாக நோக்கக்கூடாது.

கருத்து வெளிப்பாடு மற்றும் எதிர்ப்பை வெளிப்படுத்தும் அடிப்படை உரிமையை பாதுகாக்குமாறும், ஒடுக்குதல் நடவடிக்கைகளுக்குப் பதிலாக பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோருகின்றோம். - என்றுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை தொழில் மற்றும் பொது ஊழியர் சங்கம், இலங்கை அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் சங்கம், நீர்ப்பாசன பொது ஊழியர் சங்கம், அரச தொழிலாளர் தொழிற்சங்க கூட்டமைப்பு, மாகாண முகாமைத்துவ சேவை அலுவலர்கள் சங்கம், தேசிய அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பு ஊழியர் சங்கம், ரயில்வே தரப்படுத்தப்பட்ட தொழிற்சங்க கூட்டமைப்பு , ரயில்வே ஊழியர் சங்கம், ரயில்வே தொழிலாளர் ஒன்றியம், ஊடக சேவை தொழிற்சங்க கூட்டமைப்பு, வணிக மற்றும் தொழில்துறை தொழிலாளர்கள் சங்கம், ஐக்கிய தொழிலாளர் கூட்டமைப்பு, ரெலிகொம் அனைத்து ஊழியர் சங்கம், தகவல் மற்றும் தொலைத்தொடர்பு அனைத்து ஊழியர் சங்கம், அரச தொழிற்சாலை ஊழியர் சங்கம், தேசிய அஞ்சல் சேவை ஒன்றியம், ஐக்கிய அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பு ஊழியர் சங்கம், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய ஊழியர் தொழிற்சங்கம், இலங்கை தொழிற்சங்கக் கூட்டமைப்பு, வணிக மற்றும் கைத்தொழில் ஊழியர் சங்கம், இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம், ஐக்கிய பொதுத் தொழிலாளர் சங்கம், இலங்கை தொழில்சார் ஊடகவியலாளர்கள் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், இணைய ஊடக நடவடிக்கை இயக்கம்,, கைதிகள் உரிமைகள் தொடர்பிலான குழு, இலங்கை இளம் ஊடகவியலாளர்களின் சங்கம், நிலம் மற்றும் விவசாய சீர்திருத்த நடவடிக்கை இயக்கம் ஆகியன இணைந்தே இந்தக் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளன. (எ-22)

## 17 பேருக்கு...

கொரோனாத் தொற்று இல்லை என்று பரிசோதனை முடிவுகள் வெளியாகியுள்ளன.

யாழ்.போதனா மருத்துவமனையில் சந்தேகத்தின் அடிப்படையில் சேர்க்கப்பட்ட 5 பேருக்கும், சாவகச்சேரியில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்த 12 பேருக்குமே நேற்றுச் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இவர்களுக்கு கொரோனா இல்லை என்று பரிசோதனை முடிவில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5,20)

## மருத்துவமனை...

பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு மாற்றுமாறும் கொழும்பு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளதாக, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதனையடுத்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் இன்று முன்னெடு க்கப்படவிருந்த போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு அத்தியட்சகராக, மருத்துவர் கமலநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் பருத்தித்துறை மருத்துவமனையில் ஏற்கனவே கடமையாற்றி வருகின்றார். (ஒ,5,26,105)

# பசும்பால் தாராளம் தயங்காது பருகுங்கள்

## மாவட்டச் செயலர் நல்லறிவுரை

## 'அங்கருக்கு' தட்டுப்பாடு என்றும் தெரிவிப்பு

**மன்னார், ஏப். 14**

**பிற மாவட்டங்கள் போன்று மன்னாரிலும் அங்கர் பால்மாவுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. எனினும், மன்னார் மாவட்டத்தில் போதியளவு பசுப்பால் உள்ளது. பசுப்பாலைச் சரியான முறையில் பயன்படுத்தினால் பொதுமக்களுக்கு பால் தட்டுப்பாடு ஏற்படாது என்று மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.**

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பொதுமக்களுக்கு நல்லறிவுரையாக அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் உட்பட வடக்கில் மட்டுமன்றி நாடு முழுவதுமே அங்கருக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்த நிலையிலேயே மன்னார் மாவட்டச் செயலர் மேற்கண்டவாறு அறிவுரை கூறியுள்ளார்.

இந்த அறிவுரை யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கும் ஏனைய மாவட்டங்களின் மக்களும் மிகப்பொருத்தமானது என்று சுக அதிகாரிகளும் கூறுகின்றனர். பசுப்பாலையே பருகுங்கள் என்று அவர்களும் வடக்கு மக்களைக் கோருகின்றனர், அறிவுறுத்துகின்றனர்.

ஊரடங்கு நடைமுறையில் உள்ளபோதும், யாழ்ப்பாணத்தில் அங்கர் மாவைப் பெற்றுக்கொள்ள சிலர் முண்டியடிக்கின்றனர். இந்த நிலையில் பசுப்பாலைப் பருகுமாறு அதிகாரிகள் வலியுறுத்துகின்றனர்.

இதன் மூலமாக உள்ளூர் உற்பத்தி மேம்படுத்தப்படும். தற்போதைய இக்கட்டான நிலையில், பசுப்பால் சிறந்தது என்று அதிகாரிகள் பரிந்துரைக்கின்றனர். ஒப்பீட்டளவில்கூட பால்மா பைக்கற்றுக்களைவிட பசுப்பாலை எவ்வளவோ மேலானது என்றும் பரிந்துரைக்கின்றனர்.

பொதுமக்கள் தற்போதைய காலச் சூழ்நிலையிலாவது தங்கள் எண்ணங்களை மாற்றிக் கொள்ளவேண்டும் என்றும் அதிகாரிகள் வலியுறுத்துகின்றனர்.

மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னாரில் கீரி சம்பா அரிசி போதியளவு உள்ளது. நெல் சந்தைப்படுத்தும் திணைக்களத்தில் 943 மெட்ரிக் தொன் நெல் கையிருப்பில் இருக்கின்றது.

எமது நெல் சந்தைப்படுத்தும் திணைக்களத்தில் 943 மெட்ரிக் தொன் நெல் கையிருப்பில் உள்ளது. தனியாரிடமும் போதியளவு நெல் உள்ளது. மாவுக்கும் தட்டுப்பாடு இல்லை.

சில தனியார் நிறுவனங்கள் பொதுமக்களுக்கான உணவு விநியோகத்தில் விலைத் தளம்பல்களைத் தொடர்ந்தும் ஏற்படுத்தி வருகிறார்கள். எந்தக்காரணம் கொண்டும் உணவுப் பொருள்களின் விலையை அதிகரித்து விற்கக் கூடாது என்று அவர்களுக்கு இறுக்கமான பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. பணிப்புரைகளை மீறிச் செயற்படும் தனியார் விநியோகஸ்தர்களுக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் தெரிவித்தார். (த-213)

# வெளியே நடமாடிய ரஞ்சன் உள்ளே!

கொழும்பு, ஏப்.14

ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நேற்றிரவு மிரிஹான பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

ஊரடங்குச் சட்டக் காலப்பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி வெளியில் நடமாடியமை மற்றும் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் அவர் கைதுசெய்யப்பட்டார் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

சட்டவிரோதமாகக் கைத்துப்பாக்கியை வைத்திருந்தமை மற்றும் முக்கிய பிரமுகர்களின் தொலைபேசி குரல் பதிவு நீதிமன்ற நடடிக்கைகளில்தலையிட்டமைபோன்றகுற்றச்சாட்டுக்களின் கீழ் அவர் ஏற்கனவே இரண்டு தடவைகள் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-22)

# வயிற்றில் அடிக்காதீர்

## அரசுக்கு சம்பந்தன் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.14

நாட்டின் இன்றைய நெருக்கடியான நிலைமையில் மக்களின் வயிற்றில் அடிக்கும் வகையில் அரசு செயற்படக்கூடாது. ஊரடங்குச் சட்டத்தால் வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கும் மக்களுக்கு உரிய வகையில் நிவாரணப் பொருட்களை அரசு வழங்க வேண்டும். இல்லையேல் பாரதூரமான விளைவுகளை அரசு சந்திக்க வேண்டிவரும்.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கொரோனா வைரஸின் தாக்கத்தால் இம்முறை வீடுகளுக்குள் முடங்கிக்கொண்டே சித்திரைப் புத்தாண்டை எமது மக்கள் வரவேற்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தக் கொடிய வைரஸ் நோயை இலங்கையிலிருந்து விரட்டும் வரைக்கும் சுகாதாரத்துறையினரின் ஆலோசனைகளை கேட்டு அதன்படி மக்கள் நடந்துகொள்ள வேண்டும்; மருத்துவத்துறையினரின் வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டும்.

கொரோனாவை விரட்ட மக்களைப் பாதுகாக்க இரவு பகல் பாராது அயராது சேவையாற்றிக்கொண்டிருக்கும் மருத்துவத்துறையினர், சுகாதார த்துறையினர் உள்ளிட்ட அனைத்துத் துறையினருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதேவேளை, கொரோனாவை இல்லாதொழிக்கும் நடவடிக்கையில் அரசு மும்முரமாகச் செயற்பட்டாலும் ஊரடங்குச் சட்டத்தால் வீடுகளுக்குள் முடங்கிக்கிடக்கும் மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணிகள் மந்தகதியிலேயே இடம்பெறுகின்றன. இதனால் மக்கள் பட்டினியால் வாடும் நிலைமை ஏற்படுகின்றது. எனவே, மக்களின் வயிற்றில் அடிக்காத வகையில் அரசு செயற்பட வேண்டும் என்றார். (எ-22)

# வெற்றி ஆண்டாகட்டும்

## புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் மாவை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.14

அடிமைத் தளையிலிருந்து விடுதலைக்காக அர்ப்பணித்த எம் தமிழ்பேசும் மக்கள் "கோவிட்19" உயிர்க்கொல்லி நோயிலிருந்தும் விடுதலை பெற்று வெற்றி கொள்ள புத்தாண்டிலிருந்து அர்ப்பணித்துச் செயற்படுங்கள் என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சோ. சேனாதிராஜா.

சித்திரைப் புத்தாண்டுப் பிறப்பை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது

சார்வரி புத்தாண்டு பிறந்துள்ளது. அனைவருக்கும் இதயபூர்வமான புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். அறுகு, துளசி, வேப்பிலையுடன் மஞ்சள் கலந்து நன்றே நீராடுங்கள். நம்பிக்கையுள்ள தெய்வங்களை வழிபட்டு இறை பணி செய்யுங்கள். "கோவிட்19" உயிர்க்கொல்லி நோயிலிருந்தும் விடுதலை பெற்று வெற்றி கொண்ட ஆண்டாக மாற்ற புத்தாண்டிலிருந்து அர்ப்பணித்துச் செயற்படுங்கள், எழுந்துநில்லுங்கள்.-என்றுள்ளது. (எ)

### மருத்துவ...

தற்போது நாட்டில் கொரோனா தொற்று வேகமாக இனங்காணப்பட்டு வருகின்றது. நாடாளாவிய ரீதியில் இதுவரை 217 பேர் கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ள நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்திலும் 7 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகியிருந்தனர்.

தற்போது யாழ்ப்பாணத்திலும் கொரோனா தொற்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவர்கள், தாதியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அர்ப்பணிப்புமிக்க சேவையை வழங்கி வருகின்றனர். விடுமுறைகள் எடுக்காது இரவு, பகலாக அவர்கள் மருத்துவ சேவைகளை வழங்குகின்றனர்.

இடர்காலத்தைக் கருத்தில் கொண்டு, புத்தாண்டு பிறந்துள்ள நிலையிலும் அதைப் பொருட்படுத்தாது மருத்துவ சேவைகளை வழங்கிவரும் அவர்களுக்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி பாராட்டுத் தெரிவித்துள்ளார். (எ-20)

### தாவடிக்கு...

காப்புத் தரப்பினரின் கண்காணிப்பில் இருந்து முற்றாக விடுவிக்கப்பட்டது.

இந்தக் கிராமம் 3 வாரங்களாக பாதுகாப்புத் தரப்பினரின் கண்காணிப்பில்முடக்கப்பட்டு இருந்தது. கிராமத்தில் இருந்து வெளியேற மற்றும் அங்கு உள்நுழையத் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

மக்களுக்குத் தேவையான உணவு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தன. அத்துடன் கிராமத்தில் தொற்று நீக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

சுகாதாரப் பகுதியினர் அங்கு தீவிர கண்காணிப்பில் இருந்தனர். தற்போது புது வருடத்தை முன்னிட்டு தாவடிக் கிராமம் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. (க-111)

### தாராபுரம்...

விக்கப்பட்டதாக மன்னார் மாவட்டச் செயலர் சி.மோகன்றாஸ் தெரிவித்தார்.

தாராபுரத்தில் மார்ச் மாதம் இடம்பெற்ற மரண வீட்டில் பங்கேற்ற புத்தளம் வாசிக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து தாராபுரம் கிராமம் கடந்த 8ஆம் திகதியிலிருந்து தனிமைப் படுத்தப்பட்டது.

தாராபுரம் மேற்கில் 224 குடும்பங்களைச் சேர்ந்த 864 பேரும், தாராபுரம் கிழக்கில் 196 குடும்பங்களைச் சேர்ந்த 752 பேருமாக 420 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 616 பேர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்தப் பிரதேசம் முழுவதும் கிருமி தொற்று நீக்கம் செய்யப்பட்டது. அத்துடன் சிலருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதா என்ற பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது. அவர்களுக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது. சந்தேகத்துக்கிடமானவர்கள் எவரும் அடையாளம் காணப்படாத நிலையில், தாராபுரம் நேற்று மதியம் தனிமைப்படுத்தலிருந்து விடுவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தாவடிக் கிராமமும் தனிமைப்படுத்தலிருந்து நேற்று விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ.ப,105)

# ஆபத்தை உணர்ந்து வீடுகளில் இருங்கள்

## புத்தாண்டு வாழ்த்தில் ஆறு.திருமுருகன் அறிவுரை



**யாழ்ப்பாணம்,ஏப்.14**
**கொரோனா வைரஸ் தொற்றால் நாடு முடக்கப்பட்டுள்ள நிலையில் அரசு முன்னெடுக்கும் தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புக் கொடுத்து வீடுகளில் இருந்து எங்களைத் தற்காத்துக் கொள்வோம்.**

இவ்வாறு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் தலைவர் கலாநிதி.ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
உலகம் முழுவதும் கொரோனா என்னும் அபாய நோயின் அச்சத்தில் இருக்கும் சூழலில் நாம் அமைதியாக எங்கள் இல்லங்களில் இருந்து அனைவருக்காகவும் இந்நாளில் பிரார்த்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.
வருடப் பிறப்பு நாளில் ஆலயம் செல்லவேண்டும் என்று ,சமூக நன்மைக்காக உருவாக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தை மீறாதீர்கள். நாம் மருத்துவ சமூகத்தின் வார்த்தைக்கு மதிப்பளித்து ,நோய் பரவாது சமூகத்தைக் காக்கும் தர்மத்தை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும்.
இத்தர்மத்தை அனைவரும் கடைப்பிடிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.
இரவு பகலாக உயிர்களைக் காக்கும் மருத்துவ சமூகத்துக்கும், ஏனைய பணிகளில் அயராது தொண்டு செய்துவரும் பண்புடையார்க்கும் நன்றி தெரிவித்து அவர்களுக்காகவும் இந்நாளில் பிரார்த்தியுங்கள்.
எங்களுடைய உறவுகள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கிறார்கள்.அவர்கள் இன்று ஆபத்தான சூழ்நிலையில் மிகக் கவலையோடு இருப்பதை அனைவரும் அறிவோம். அவர்களின் பேருதவிகளால் எம்மண்ணில் எத்தனைபேர் ஆறுதல் பெற்றார்கள்.அவர்களின் வாழ்வுக்காக அனைவரும் இந்நாளில் நன்றியோடு பிரார்த்தியுங்கள்.
புதுவருட நாளில் ஆடம்பரம் ,ஆரவாரம் அத்தனையையும் தவிர்த்து மனிதாபிமான ரீதியில் அமைதியாக உங்கள் இல்லங்களில் பிரார்த்தனை செய்யுங்கள். சென்ற ஆண்டில் எமக்கு இறைவன் தந்த நல்வாய்ப்புக்களுக்கு நன்றி சொல்வதோடு நாம் விட்ட தவறுகளையும் நினைந்து மன்னிப்பு வேண்டிப் பிரார்த்தியுங்கள்.
புத்தாண்டில் புதிய சிந்தனைகோடு நல்லமனிதர்களாக நாம் வாழத் திடசங்கற்பம் கொள்வோம்- என்றுள்ளது. (க)

# சார்வரி புது வருடத்தில் துயரங்கள் மறையட்டும்

*தண்டபாணிக தேசிகர் வாழ்த்து*



யாழ்ப்பாணம்,ஏப்.14
எம் நாட்டு மக்களுக்கு மாத்திரமல்ல, உலக மக்கள் அனைவருக்கும் அளப்பரிய துன்ப துயரங்களை வழங்கி, பல நாடுகளிலும் பல உயிர்களைக் காவு கொண்டு எம்மை விட்டு, விகாரி வருடம் மறைகிறது. உதயமாகும் சர்வ மங்களம் பொருந்திய சார்வரி வருடத்தை மனதார வாழ்த்தி வரவேற்போம்.
அனைத்து மக்களின் துன்பம், துயரங்கள், வறுமை, இல்லாமை என்பன நீங்கி மக்கள் ஆறுதலாக, நிம்மதியாக ஒற்றுமையாக தத்தம் தொழில்களைச் செய்து வளங்களைப் பெருக்கி வாழ்வில் சுபீட்சமடையப் பிரார்த்திப்போம்.
இவ்வாறு வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீறி சோமாஸ் கந்த தண்டபாணிக தேசிகர் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவரது செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
மக்கள் தாம் தமக்கு வேண்டும் என விரும்பும் அனைத்தையும் மலரும் புத்தாண்டு வழங்க வேண்டும். மக்களின் வித விதமான கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றிட வருகை தரும் புத்தாண்டை வரவேற்போம்.
பிறக்கப் போகும் புதுவருடமான சார்வரி என்னென்ன கொண்டு வருமோ என்ற எதிர்பார்ப்பு சிறிதும் இல்லாமல், இப்போது உள்ள கஷ்டங்கள் நீங்கினாலே அனைவர்க்கும் நிம்மதி என்ற எண்ணத்தில் நாம் அனைவரும் மாறாத நம்பிக்கையுடன் அதனை வரவேற்போம்- என்றுள்ளது. (க)

# மரக்கறிகள், மீன் வகைகளை பகிர்ந்து வழங்க அரசு திட்டம்

கொழும்பு, ஏப். 14
மொத்த விற்பனை நிலையங்களில் இருந்து மரக்கறி, மீன் ஆகியவற்றைக் கொள்வனவு செய்து அனைத்து பிரதேச சபைகள் ஊடாகப் பகிர்ந்தளிக்க அரசு தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
இதற்கமைய 7 1/2 இலட்சம் மெட்ரிக் தொன் கிலோகிராம் மரக்கறிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்று அத்தியாவசிய சேவை தொடர்பான ஜனாதிபதி செயலணி குறிப்பிட்டுள்ளது. அந்தச் செயலணி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,
சுகாதாரத் துறையினரின் பரிந்துரைக்கு அமையவே மொத்த விற்பனை மத்திய நிலையங்கள் மூடப்பட்டன. இதனால் விவசாயிகள் பல நெருக்கடிகளை எதிர் கொண்டார்கள். இதனைக் கருத்திற் கொண்டு அரசு முதன் முறையாக மொத்த விற்பனை மத்திய நிலையங்களிலிருந்து மரக்கறி மற்றும் மீன் ஆகியனவற்றைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது. நுவரெலியா மொத்த விற்பனை மத்திய நிலையத்துக்கு மரக்கறிகளை விநியோகிக்கும் விவசாயிகளிடமிருந்து 35 ஆயிரம் மெட்ரிக் தொன் மரக்கறி வகைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
இந்த மரக்கறிகள் 35 லொறிகள் ஊடாக கொழும்பு மாநகர சபை, கொடிக்காவத்த, முல்லேரியா நகர சபை, கடுவெல, மொரட்டுவ ,பொரலஸ்கமுவ, பியகம, களுத்துறை, வல்லாவிட,தொடங்கொட, மாத்தறை, பயாகல, கம்பளை, அநுராதபுரம் , கிழக்கு நுவரகம, மதவாச்சி, கஹட்டகஸ்திகிலிய ஆகிய பிரதேசங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.
தம்புள்ள மொத்த விற்பனை மத்திய நிலையம் ஊடாக 4 இலட்சம் கிலோகிராம் மரக்கறிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இவை 50 லொறிகள் ஊடாக லக்கல, நாவுல, பல்லேகல, கலேவெல ஆகிய பிரதேச சபை ஊடாக பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)




# கொரோனா பற்றி வதந்திகள் விரைவில் அரசுக்கு முறையீடு

கல்முனை, ஏப்.14
கொரோனா வைரஸ் தொடர்பாக பொய்யான செய்திகள், வதந்திகளை சமூக ஊடகங்களில் எழுதித் தள்ளுகின்றனர். அவ்வாறு வதந்திகளைப் பரப்புவபவர்களுக்கு எதிராக மிக விரைவில் ஜனாதிபதிக்கும், ஜனாதிபதியின் செயலகப் பிரிவுக்கு முறைப்பாடொன்று செய்யப்பட உள்ளது என கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் கு.சுகுணன் தெரிவித்தார்.
கொரோனா வைரஸ் தொடர்பாக அம்பாறை மாவட்டத்தின் நிலவரம் குறித்து பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரால் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
கொரோனா நோயின் தாக்கத்தை தொடர்ந்து உண்மையில் அதிக உயிரிழப்புகளால் உலகமே உறைந்து கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் முடிந்த அளவு இந்தப் பிரச்சினையிலிருந்து எமது மக்களைக் காப்பாற்றுவதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம்.
ஜனாதிபதியின் கீழ் அமைந்த செயலணி, சுகாதாரத்துறையினர், பொலிஸார், முப்படையினர், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் பகுதிகள், ஊடக நண்பர்கள் அல்லது அனுமதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள், ஊடகங்கள் சிறப்பான சேவைகளைச் செய்து வருகின்றார்கள்.
இருப்பினும் சில இடங்களில் நாங்கள் தடங்கல்களைக் காண்கின்றோம் அதாவது இந்த கொரோனா சம்பந்தமான செய்திகளை வதந்தியாகப் பரப்புவதில் பதிவுகளைச் செய்யாத ஊடகங்கள் முயற்சிக்கின்றன.
எனினும் உண்மையில் பதிவு செய்யப்பட்டவர்கள், அல்லது அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட ஊடகங்களால் வழங்கப்படுகின்ற ஊடகச் செய்திகளை மட்டும் மக்கள் நம்ப வேண்டும் . அந்த வகையில் நாங்கள் பதியப்படாது செயற்படுகின்ற ஊடகங்கள் என்று மக்கள் மத்தியில் நடமாடும் வதந்திகளை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும்.
செய்திகள் என்ற போர்வையில் பொய்யான செய்திகள், வதந்திகளைப் பரப்பி மக்களை ஒரு சங்கடத்துக்குள் தள்ளி சுகாதாரத் துறையைக் கூட ஆட்டம் காட்டக் கூடிய அளவுக்கு போலி ஊடகங்கள் மலிந்து விட்டன. வதந்தி மயப்படுத்தப்பட்ட செய்திகளை எந்த விதமான தங்குதடையின்றி பலரும் எழுதித் தள்ளுகிறார்கள்.
உண்மையில் இந்தக் காலங்களில் நீங்கள் பொறுப்பு மிக்கவர்களாக ஒவ்வொருவரும் தங்களுடைய பெறுமதியை உணர்ந்தவர்களாக நடந்துகொள்ள வேண்டும். இவ்வாறு வதந்திகளைப் பரப்புகின்ற ஊடகங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவை தொடர்பில் ஜனாதிபதி செயலகப் பிரிவுக்கு எங்களால் மிக விரைவில் முறைப்பாடு செய்யப்படவுள்ளன -என்றார். (ப)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# வரலாற்றில் இடம்பிடிக்க வருகவே சார்வரி

மிக இக்கட்டான ஒரு சூழலுக்குள் ஒரு வேண்டாப் பிள்ளையைப் போல பிறந்திருக்கிறது, சார்வரி வருடம்.

வழக்கமாக தமிழ் சிங்களப் புத்தாண்டு என்றாலே ஏப்ரல் மாதத் தொடக்கத்திலேயே, களை கட்டி விடும். வருடப்பிறப்பையொட்டி வழங்கப்படும் இரண்டு நாள் விடுமுறையும், பண்டிகைக்கால உறவுகளின் ஒன்றுகூடலுமாக புத்தாண்டு கோலாகலமாகி, வருடத்தின் அதியுன்னத நாள்கள் பிறப்பெடுக்கும். எங்கும் மகிழ்வின் ரேகைகள் படர்ந்திருக்கும். பட்டாசு வெடிச் சத்தமும், புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகள், கலைவிழாக்கள் என்பவற்றின் ஆரவாரம் இலங்கை முழுதும் நிறைந்திருக்கும். வர்த்தக நிலையங்கள் புத்தாண்டு வியாபாரத்தில் திக்குமுக்காடும். கைவிசேடம் வழங்கலும், பெறுதலும் புத்தாண்டின் இனிமையை இன்னும் கூட்டி நிற்கும்.

ஆனால் இந்த வருடம் அவை எவையுமே இல்லை. வழக்கமாக எல்லோரையும் மகிழ்வாகப் புத்தாண்டு கொண்டாடச் சொல்லி உற்சாகப்படுத்துகின்ற அரசியல் தலைவர்களினதும், ஆன்மிகத் தலைவர்களினதும் வாழ்த்துச் செய்திகளில் கூட அமைதியாக, வீட்டில் இருந்து கொண்டாடுங்கள் என்ற எச்சரிக்கை தவறாமல் இடம்பெறுமளவுக்கு புத்தாண்டு சோபையிழந்து போனது.

இம்முறை ஏப்ரல் 13 ஆம் திகதி இரவு 7.26 க்கு சார்வரி வருடம் பிறந்தாலும், அரசு 14 ஆம் திகதியையே புத்தாண்டு தினமாக அறிவித்திருந்தது. அதனால் புத்தாண்டு எப்போது என்று பலருக்கும் குழப்பம். இதுவே வழக்கமான புத்தாண்டாக இருந்திருந்தால், எப்போது உண்மையான புத்தாண்டு என்று ஒரு சர்ச்சை ஏப்ரல் மாத ஆரம்பத்திலேயே வெடித்திருக்கும். ஆனால் இம்முறை எப்போது வேண்டுமானாலும் புதுவருடம் பிறந்து விட்டுப் போகட்டும்,நோயற்ற வாழ்வு நிலைத்தாலே போதும் என்ற மனநிலையே பலருக்கும். இந்தளவுக்கு புத்தாண்டை எதுவுமற்ற சாதாரண நாள்களைப் போல முக்கியத்துவமற்ற ஒன்றாக மாற்றியது வேறு யாருமல்ல, கொரோனா என்னும் கண்ணுக்குத் தெரியாத வைரஸ் தான். எந்தப் படோடபமுமில்லாமல், பட்டாசு ஒலி இல்லாமல், பண்டிகைக்கால ஆரவாரமோ, பலகாரங்களின் பரிமாறலோ, உறவுகளின் சங்கமமோ இல்லாமல், வெற்றிலை, பாக்கு அழைப்புக் கூட இல்லாமல் ஒரு பாவப்பட்ட ஜீவன் போல சந்தடியின்றிப் பிறந்திருக்கும் சார்வரி வருடத்துக்கு மிகப்பெரிய பொறுப்பு உண்டு. கொரோனா என்னும் வைரஸால் முழு உலகுமே பட்டுக் கொண்டிருக்கும் துயரைத் துடைத்த ஆண்டாக சார்வரி மாற வேண்டிய கட்டாயம். அதற்காக சார்வரிக்கு முழு ஒத்துழைப்பையும் கொடுக்க வேண்டியது நம் அனைவரினதும் கடமை.

புதிதாக எந்த ஒத்துழைப்பும் அதற்குத் தேவையில்லை. இப்போது செய்வதைப் போல வீட்டுக்குள்ளேயே நடமாட்டத்தைச் சுருக்குதல், உறவுகளோடு தேவையற்ற தொடர்பாடலைத் தவிர்த்தல், அடிக்கடி கை கழுவுதல், முகக்கவசத்தை அணிதல், கொரோனா அறிகுறிகள் தென்படின் எம்மை நாமே தனிமைப்படுத்தல், மருத்துவமனைக்குச் சென்று பரிசோதித்தல், சுகாதாரத் துறையினரினதும், அரசினதும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றல் என்பவற்றைச் சரிவரச் செய்தாலே போதும். சார்வரி வருடம், கொரோனாவை ஓட ஓட விரட்டி விடும். கொரோனா என்ற உலகின் மிகக்கொடிய விரோதியை ஒழித்து, வரலாற்றில் இடம்பிடிக்கப் பிறந்திருக்கும் சார்வரி வருடத்தை வாஞ்சையுடன் வரவேற்போம்.

# இரண்டு வாரங்களுக்கு பொறுப்போடு செயற்படுக

## இல்லையேல் பேரிழப்பு என அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.14



நாட்டில் கொரோனா வைரஸால் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, நாம் ஒவ்வொருவரும் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குப் பொறுப்புடன் செயற்படவேண்டும். இல்லையேல் நாம் பல இக்கட்டான நிலைமைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிவரும். பேரிழப்புக்களைக் கூடச் சந்திக்க வேண்டி வரும்.

இவ்வாறு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி எச்சரித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டு மக்கள் தமிழ் சிங்களப் புத்தாண்டில் பொறுப்புடன் செயற்பட்டு, நாடு எதிர்நோக்கியுள்ள அபாயத்தைக் குறைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பொறுப்புடன் ஒவ்வொருவரும் செயற்படும் பட்சத்தில், கொரோனா வைரஸ் பிடியில் இருந்து விடுபட்டு பிரச்சினை இல்லாமல் எதிர்காலத்தில் பயணிக்க முடியும்.

நாட்டின் எதிர்காலம் தொடர்பில் மிக முக்கிய பொறுப்பு பொதுமக்களிடம் இருக்கின்றது. எனவே, தீர்மானம் மிக்க எதிர்வரும் இரண்டு வாரங்களில் பொறுப்புடன் செயற்பட வேண்டியது அனைவரினதும் கடமையாகும். இல்லையேல் நாம் பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடலாம் - என்றார். (க-22)

# ஒரே குடும்பத்தில் ஐவருக்கு கொரோனா

கொழும்பு,ஏப்.14

இரத்தினபுரியில் ஆயிரத்து 47 பேர் 21 நாள்கள் வரை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கே.பி.கன்னங்கர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இரத்தினபுரியில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட ஐவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

இவர்களில் முதலில் இனங்காணப்பட்ட மாணிக்கக்கல் வர்த்தகரின் மனைவி குறித்த தொற்றிலிருந்து குணமடைந்துள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-22)

# 136 கிலோ கஞ்சா மீட்பு

## மூவர் கைது

யாழ்ப்பாணம்,ஏப்.14

பருத்தித்துறைக் கடற்பரப்பில் 136 கிலோ கஞ்சாவுடன் மூவர் நேற்றுக் காலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறைக் கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமான படகை கடற்படையினர் சோதனை செய்த போது, படகில் கஞ்சா மீட்கப்பட்டது.

சந்தேகநபர்கள் கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (க-26)

# காத்திருப்போருக்கு 5,000 ரூபா 15ஆம் திகதி

கொழும்பு, ஏப். 14

காத்திருப்புப் பட்டியலிலுள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்கான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன.

இதற்குத் தேவையான நிதியை மாவட்டச் செயலாளர்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று அத்தியாவசிய சேவைகளுக்கான ஜனாதிபதி செயலணி தெரிவித்துள்ளது.

கிராம மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என ஜனாதிபதி செயலணி குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் நாள்களில் கிராம மட்டத்தின் பரிந்துரைக்கமைய, பாடசாலைச் சேவையில் ஈடுபடும் வாகன உரிமையாளர்கள், ஓட்டோச் சாரதிகள் மற்றும் சுய தொழிலில் ஈடுபடுவோருக்கும் கொடுப்பனவு வழங்க எதிர்பார்த்துள்ளதாக அத்தியாவசிய சேவைகளுக்கான ஜனாதிபதி செயலணி மேலும் தெரிவித்துள்ளது. (க-22)

# தனிமைப்படுத்தப்பட்ட யாழ்.மாநகர பகுதிகள் இன்று விடுவிப்பு!

யாழ்ப்பாணம்,ஏப்.14

யாழ்.மாநகரப் பிரதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் இன்று விடுவிக்கப்படும் என்று சுகாதாரத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

காங்கேசன்துறை, மானிப்பாய் ஆகிய பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் தவிர்ந்த, ஏனைய அனைத்து இடங்களையும் புதுவருடத்துடன் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தடை செய்யப்பட்ட அனைத்துப் பகுதிகளும் விடுவிக்கப்படுகின்ற போதும், ஏனைய பிரதேச மக்களுக்கான ஊரடங்கு நடைமுறைக்குள் இப்பகுதி மக்களும் உள்ளடக்கப்படுவார்கள் .

அதேநேரம் காங்கேசன்துறை மற்றும் மானிப்பாயில் உள்ள 10 பேருக்கான தனிமைப்படுத்தல் அடுத்த வாரமே நிறைவு பெறும் எனவும் அதிகாரி தெரிவித்துள்ளார். (க-105)

# அபாயக் கட்டத்தில் மேல் மாகாணம்

## கொரோனாவால் பெரும் அச்சம்

கொழும்பு,ஏப்.14
இலங்கையில் கொரோனா வைரஸ் காரணமாக மேல் மாகாணத்தின் வடக்குப் பகுதி தற்போதும் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது.
ஜாஎல பகுதியில் பதிவான கொரோனா தொற்றாளர்களின் தொடர்பாடல் வலையமைப்பு மற்றும் அதன் விசாலம் தொடர்பில் சுகாதாரத்துறையினரும், பாதுகாப்புத் துறையினரும் வெளிப்படுத்திக் கொண்டுள்ள தகவல்களுக்கு அமைவாக, சுகாதாரத் தரப்பினர் இதனை வெளிப்படுத்தியுள்ளனர்.
இந்த நிலையில் குறித்த பகுதியில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களின் தொடர்பாடல் வலையமைப்பினரைக் கண்டறிந்து, தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க தற்போது பாதுகாப்புத் தரப்பினருடன் சுகாதார அதிகாரிகள் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.
ஜா எல சுதுவெல்ல, ஜாஎல நகர் பகுதி மற்றும் கம்பஹா மாவட்டத்தின் சில பகுதிகள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.
கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 7 பேர் ஜாஎல - சுதுவெல்ல பகுதியில் கடந்த வெள்ளியன்று அடையாளம் காணப்பட்டனர். அவர்கள் ஒலுவில் கடற்படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் வெளிப்படுத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவில் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.
அவர்களில் 5 பேர் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்பதால் அவர்கள் பெரும்பாலானோருடன் தொடர்புபட்டிருக்கின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்பதால் அவர்களைக் கட்டுப்படுத்துவது கடினம்.
ஜா எலவில் அடையாளம் காணப்பட்ட முதலாம் நபரும் போதைப்பொருளுக்கு அடிமையானவர். அவர் ஊடாக இந்த 5 பேருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளது.

# 3000 பேருக்கு கொரோனா?

கொழும்பு,ஏப்.14
**தற்போது கண்டுபிடிக்கப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் தொடுகை மூலமாக சுமார் 3000 பேருக்குக் கொரோனா பரவியிருக்கலாம் என்றே கணிப்பிட வேண்டும் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் நவீன் டி சொய்சா தெரிவித்துள்ளார்.**

நாட்டில் தற்போது 210 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
56 பேர் தற்போது வரை தொற்றிலிருந்து மீண்டு வீடு திரும்பியுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.
வெறும் 30 நாள்களில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தி விட்டதாக அறிவித்தால் அது சாத்தியமாகாது.
தற்போது கண்டுபிடிக்கப்பட்ட 210 பேரிடம் இருந்து தொடுகை மூலமாக சுமார் 3000 பேருக்கு கொரோனா பரவியிருக்கலாம் என்றே கணிப்பிட வேண்டும்.
இது தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பவும் எதிர்பார்க்கின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை, நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில், புதுவருடத்தை வீட்டிலிருந்து குடும்ப உறுப்பினர்களுடன் கொண்டாடுமாறு அரசாங்கம் கேட்டுள்ளது. (க)

## 'தாய் தேசம்' அறக்கட்டளையால் கர்ப்பிணிகளுக்கு சத்துணவு

கொடிகாமம், ஏப்ரல். 14
கர்ப்பிணிகளுக்கான சத்துணவுத் திட்டம் 'தாய் தேசம்' அறக்கட்டளையின் ஏற்பாட்டில் அமரர் மாமனிதர் ரவிராஜ் குடும்பத்தினரின் முழுமையான அனுசரணையுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.
தென்மராட்சிப் பகுதியில் உள்ள அனைத்துக் கர்ப்பிணிகளையும், மண்ணில் பிறக்கப் போகும் குழந்தைகளின் ஆரோக்கியத்தையும் கவனத்தில் கொண்டே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. முதல் கட்டமாக அமரர் மாமனிதர் ரவிராஜின் குடும்பம் சார்பாக 50 சத்துமாப் பொதிகள் வழங்கப்படவுள்ளன.
அத்துடன் சுகாதாரத் துவாய்கள் மற்றும் சோப் போன்ற பொருள்களும் வழங்கப்படவுள்ளன.
இந்த மாதம் தென்மராட்சிப் பிரதேசத்தில் குழந்தை பிரசவிக்க இருக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. (ப-159)

## பாவனையாளர் அதிகார சபைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து 121 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஏப்.14
யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை பாவனையாளர் அதிகார சபைக்கு 121 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று அவை யாவும் சீர் செய்யப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர் சபை தெரிவித்தது.
யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகள் 209 தடவை (விசிட்) பரிசோதனைக்காகச் சென்றுள்ளனர். 121 முறைப்பாடுகள் கிடைத்தன. இந்த முறைப்பாடுகள் அனைத்தும் உடனுக்குடன் சீர் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பில் அந்தந்தப் பிரதேச செயலருக்கு அறிவிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அவற்றில் நடைமுறைக்கு சாத்தியம், மற்றும் தேவையான விடயங்களை பெற்று அதையும் நடைமுறைப் படுத்தி வருகின்றோம் என்று அந்தச் சபை மேலும் தெரிவித்தது. (ப-7)

# தேர்தல் பணிக்காக ரூ.1 லட்சத்துக்கு வாடகை வீடு

கொழும்பு, ஏப். 14
தேர்தல் பணிகளுக்குப் பயன்படுத்துவதற்காக எதிர்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தை சஜித் பிரேமதாச, அரசிடமிருந்து வாடகைக்குப் பெற்றுள்ளார். இந்த வீட்டின் மாத வாடகை ஒரு லட்சம் ரூபா.



முன்னாள் எதிர்கட்சித் தலைவராக சஜித் இருக்கின்ற போதிலும், உத்தியோகபூர்வ இல்லத்தைத் தேர்தல் பணிகளுக்காகப் பயன்படுத்த முடியாது. இதனால் தான் அதனை வாடகை செலுத்திப் பெற்றுள்ளார்.
மார்ச் 18 ஆம் திகதி இதற்கான அமைச்சரவை அனுமதி கிடைத்தது. ஏப்ரல் 11 ஆம் திகதியில் இருந்து சஜித் அந்தக் கட்டடத்தை வாடகைக்குப் பெற்றுள்ளார்.
தற்போது எதிர்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லமாகப் பயன்படுத்தப்பட்ட கட்டடம் முன்னாள் எதிர்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தனின் பாவனைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
மேலும், எதிர்கட்சித் தலைவரின் அலுவலகமாகத் தற்போது இயங்கி வரும் கட்டடம் எதிர்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லமாகப் பயன்படுத்துவதற்காக ஏப்ரல் 11 முதல் ஒதுக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

# இலாப நோக்கமற்று சேவை செய்ய அரிசி ஆலைகள் முன்வரவேண்டும்

## மட்டு. மாவட்டச் செயலர் கோரிக்கை

மட்டக்களப்பு, ஏப்.14
அரிசி ஆலை உரிமையாளர்கள் இலாப நோக்கமற்று மக்களுக்குச் சேவை வழங்க முன்வர வேண்டுமென மட்டக்களப்பு மாவட்டச் செயலர் கலாமதி பத்மராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,
அனைத்து அரிசி ஆலைகளும் அத்தியாவசிய சேவையாக அரசால் பிரகடனப்படுத்தப்பட்டதையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து அரிசி ஆலை உரிமையாளர்களையும் சந்திக்கும் விசேட கூட்டம் நேற்று மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் கலாமதி பத்மராஜா தலைமையில் இடம்பெற்றது. அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் பட்டினியினால் பாதிக்கப்படாமலிருக்க அனைத்து அரிசி ஆலைகளும் திறக்கப்பட்டு இயங்க வேண்டும். மாவட்டத்தினுடைய அரிசித் தேவையினைப் பூர்த்தி செய்த பின்னரே பிற மாவட்டங்களுக்கு அரிசி விநியோகிக்க வேண்டும். அரசின் கட்டுப்பாட்டு விலைக்கே அரிசி விற்பனை செய்ய வேண்டும். அத்துடன் மாவட்டத்தின் எந்த இடத்திலிருந்தும் வியாபாரிகள் அரிசியைக் கொள்வனவு செய்யமுடியும். அதற்கான வசதிகள் செய்துதரப்படும் - என்றார்.
இந்த விசேட கூட்டத்தில் மேலதிக செயலர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந்த், காணிப் பிரிவு மேலதிக செயலர் நவரூபரஞ்சினி முகுந்தன், மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லக்ஸ்ரீ விஜயசேன, இராணுவத்தின் 231 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் ஜனக பல்லேகும்புர, நுகர்வோர் அதிகார சபை மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பதிகாரியும் கிழக்கு மாகாண உதவிப் பணிப்பாளருமான ஆர்.எப். அன்வர் சதாத் மற்றும் மாவட்டத்தின் அரிசி ஆலை உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-150)

# பெருந்துயரைத் துடைக்கும் கொடையாளர்கள்

## மாணவர்களின் குடும்பங்களுக்கு உதவிகள்

கொடிகாமம், ஏப். 14
கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தின் பழைய மாணவி திருமதி மாலதி பத்மநாதன், நலன்விரும்பி ம.ஸ்ரீதாஸ் ஆகியோர் கொடிகாமம் அரசினர் வித்தியாலய மணவர்களுக்கென இரண்டு இலட்சத்து மூவாயிரத்து எழுநூற்றைம்பது ரூபா நிதியை நேற்றுமுன்தினம் வழங்கியுள்ளனர்.
கொரோனா ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள வறுமைக்கு உட்பட்ட மாணவர்களின் குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள் உள்ளிட்டவற்றை வழங்குவதற்காகவே இந்த நிதி கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-159)



நாட்டின் அசாதாரண சூழ்நிலை கருதி ஜே.கே.எஸ். பவுண்டேசன் அமைப்பின் சார்பாக வடமாகாணம் முழுவதும் 400க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (ம-222)

கல்வி பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் அனுசரணையுடன், இணுவில் மேற்குப் பிரதேசத்தில் கொரோனா தொற்று நோய் எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக பாதிக்கப்பட்ட 55 தொழிலாளர்களுக்கு உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன. (ம-222)






ஓம் சக்தி அம்மா காப்பகத்தின் நிதியிலிருந்து வழங்கப்பட்ட நிதியினைக் கொண்டு செரண்டிப் சிறுவர் இல்லத்தினூடக முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள வற்றாப்பளை, கருநாட்டுக்கேணி, கொக்கிளாய் மேற்கு, கொக்கிளாய் கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. (ம-159)







கொரோனா தடுப்பு நடவடிக்கையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு 'கிறீஸ் பியுச்சர் நேசன் பவுண்டேசன்' அமைப்பால் உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றது. கிளிநொச்சி மாவட்டம் புதுமுறிப்புக் கிராமத்தில் வசிக்கின்ற மிகவும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 55 குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய உலர் உணவுப் பொதிகள் பிரான்ஸ் வாழ் தமிழ் மக்களின் உதவியுடன் அண்மையில் வழங்கப்பட்டது. (ம)

## ஹாட்லியின் மைந்தர்கள் நிதியத்தினூடாக 15 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள்

வவுனியா, ஏப். 14
வவுனியா மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட மிகவும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட 15 குடும்பங்களுக்கு ஹாட்லியின் மைந்தர்கள் நிதியத்தினூடாக உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.
வவுனியா தோணிக்கல், நொச்சிமோட்டை, கற்குளி ஆகிய இடங்களில் தற்போதைய இடர்காலத்தில் தமது ஜீவனோபாயத்தை மேற்கொள்ள முடியாது தவித்துவந்த பெண்தலைமைத்துவக் குடும்பங்கள், ஆதரவற்ற முதியோர் குடும்பம் என தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



கொரோனாத் தொற்றைத் தவிர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஊரடங்கால் பாதிக்கப்பட்டுள்ள 150 குடும்பங்களுக்கு, கலட்டி அம்மன் இளைஞர் கழகத்தால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



வயாவிளான் சுந்தரபுரம் கிராமத்தில் வாழும் 175 குடும்பங்களுக்கும் நேற்றுமுன்தினம் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. வயாவிளான் சர்வதேச மக்கள் ஒன்றியத்தால் இந்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)





ஜடாயு தன்னார்வ அமைப்பின் ஏற்பாட்டில், சங்கானை பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் வழிகாட்டலில் நிவாரணப்பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மரக்கறிப் பொதிகளை அந்த அமைப்பு வழங்கி வருகின்றது. (ம-7)

கொரோனா தொற்று காரணமாக தொடர்ந்து ஊரடங்கு சட்டம் நடைமுறையில் இருப்பதால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்வதற்காக தியாகேந்திரனால் 5 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கொழும்பு, நீர்கொழும்பு, கட்டுநாயக்கா, குருநாகல், நுவரேலியா, தலவாக்கல, பதுளை, முல்லைத்தீவு, யாழ்ப்பாண மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (ம)



தொடர் ஊரடங்கு உத்தரவால் வாழ்வாதாரம் இன்றி வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கின்ற பல குடும்பங்களுக்கு தாயகம் அறக்கட்டளை நிறுவுனர் செல்லையா வீரசிங்கம் சிறிதரனால், நேற்றும் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக இந்தப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. (ம)



கொரோனா ஊரடங்கால் பெருமளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள முகாமில் வசிக்கும் 26 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. லண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலயத்தினரின் உதவியுடன் இந்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



## யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரால் உலர் உணவுப் பொதிகள்

யாழ்ப்பாணம், ஏப். 14

கொரோனா பரவலைத் தடுப்பதற்காக போடப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ள குடும்பங்களுக்கு, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜாவும் அவரின் துணைவி திருமதி உதயா சந்திரராஜாவும் இணைந்து தமது சொந்த நிதியில் உலர் உணவுப் பொதிகளை வழங்கி வருகின்றனர்.

தலா 850 ரூபா பெறுமதியான உணவுப் பொதிகள் இதுவரை சுமார் 600 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அரியாலை முள்ளி பகுதி மக்களுக்கு நேற்றுமுன்தினம் முதல் கட்டமாக இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி உதவியை பெற விரும்புவோர் 0777173634 என்றும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)



வெற்றிலைக்கேணி மாலைநேர கற்றல் நிலைய ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஆஸ்திரேலிய தமிழ்ச் சங்கத்தின் ஆதரவுடன் ஆஸியில் வசித்துவரும் சோமநாதனின் நிதி ஒதுக்கீட்டில் வறுமைக்கு உட்பட்ட 222 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. (ம-70)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இத்திமடு கிராமத்தில் வாழும் அனைத்துக் குடும்பங்களுக்கும், அதே இடத்தைச் சேர்ந்த காலம்சென்ற சந்திரகுமார் நினைவாக சுவிஸில் வசிக்கும் அவரின் மகன்களின் நிதியில் உலர் உணவுப் பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. (ம-500)



யாழ்ப்பாணம் கல்வியங்காடு நல்லூர் நண்பர்கள், லண்டன் இளைஞர்கள் இணைந்து முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பண்டாரக்குளம் கிராமத்தில் வசித்து வரும் இருபது குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகளை நேற்று வழங்கினர். (ம-222)



## மன அழுத்தத்தை நீக்க விசேட நிகழ்ச்சி

கொழும்பு,ஏப்.14

கொவிட் 19 விசேட சிகிச்சை மையத்தின் சிகிச்சைப் பிரிவில் உள்ள நோயாளர்களின் மன அழுத்தத்தை நீக்குவதற்கு விசேட நிகழ்ச்சித் திட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெலிகந்த அடிப்படை மருத்துவமனையில் உள்ள சிகிச்சை நிலையத்தில் இந்தத் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அங்கு பணி புரியும் ஊழியர்களும் இதில் இணைந்து கொண்டுள்ளனர்.

பாடல் மற்றும் நடனம் மூலமாக கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மன அழுத்தம் நீக்குவதற்கான நிகழ்ச்சித் திட்டமாக இது முன்னெடுக்கப்பட்டுள்ளது. (க)

## "கொரோனா" பொய்ப் பிரசாரங்கள்: 70 பேர் விசாரணை வலயத்துக்குள்!

கொழும்பு, ஏப்.14

இலங்கையில் கொரோனா வைரஸ் ஒழிப்புக்காக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பதிவு செய்த 70 க்கும் அதிகமானோர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸாரும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரும் முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு அமைய இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உண்மைக்குப் புறம்பான தகவல்களை சமூக வலைத்தளங்களில் பதிவிட்ட 11 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்களில் முன்னாள் ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர் ஒருவரும், மருத்துவர் ஒருவரும், பல்கலைக்கழக நிர்வாக அதிகாரி ஒருவரும், பல்கலைக்கழக மாணவர் ஒருவரும் அடங்குகின்றனர். இதேவேளை, உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிடும் நபர்களைக் கண்டறிவதற்குப் பல்வேறு பொலிஸ் குழுக்கள் செயற்படுகின்றன எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளுக்கு அமைய, சந்தேகநபர்கள் பலர் கைதுசெய்யப்படவுள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் கூறியுள்ளனர். (ப-22)

# பெருந்துயரைத் துடைக்கும் கொடையாளர்கள்



கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கால், சின்னமடுப் பகுதியில் நாளாந்த வருமானத்தை இழந்த 115 குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகளை சிறி இராஜ மகாமாரி அம்பாள் ஆலயம் நேற்றுமுன்தினம் வழங்கியது. ஊர்காவற்றுறைப் பிரதேச செயலரின் வேண்டுகோளுக்கமைய ஆலய அறங்காவலர் சி.செந்தூரன் இப்பொதிகளை வழங்கியிருந்தார். (ம)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால், உயரப்புலம் காட்டுக்கோவில் பகுதியைச் சேர்ந்த 20 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. கொரோனா தொற்றுக் காரணமாக இலங்கையில் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ளது. இதனால் வாழ்வாதாரத்தை இழந்த பல குடும்பங்களுக்கு இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் தொடர்ச்சியாக உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## பெண்தலைமை குடும்பங்களுக்கு நிதி உதவிகள்

யாழ்ப்பாணம், ஏப். 14

சரசாலை இலந்தைத் திடல் சிறி வீரமாகாளி அம்மன் ஆலயத்தால் 170 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது.

சரசாலை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் 113 குடும்பங்களுக்கும் சரசாலை வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 57 குடும்பங்களுக்குமாக மொத்தம் 170 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு, தலா ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

மேலும் 25 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து ஆலய அறப்பணி நிதியம் ஊடாக உலர் உணவுப் பொதிகளைப் பெற்று பயனடைந்த குடும்பங்களின் எண்ணிக்கை 425ஆக உயர்வடைந்துள்ளது. (ம-159)



திருநெல்வேலிப் பகுதியில் உள்ள முதியவர்கள் 30 பேருக்கு தமிழ் அரசுக் கட்சியினரால் நேற்றுமுன்தினம் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. சமுர்த்தி உதவி மற்றும் நிவாரண உதவி என்பன கிடைக்காதவர்களுக்கே இவ்வாறு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (105)

## ஓட்டோ சாரதிகளின் குடும்பங்களுக்கு உதவி

தொடர் ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி மற்றும் சங்கத்தானை பகுதிகளில் வாழும் ஓட்டோ சாரதிகளின் குடும்பங்களுக்கு தென்மராட்சி சமூக மேம்பாட்டு அமைப்பினர் நேற்றுமுன்தினம் உலர் உணவுப் பொதிகளை வழங்கினர்.

ஊரடங்கால் வாழ்வாதாரத்தை இழந்தோருக்கு குறித்த அமைப்பினரால் தொடர்ச்சியாக உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஐயனார் கழகத்தால் உணவுப் பொதிகள்!

யாழ்ப்பாணம், ஏப்.14

வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகத்தால், கொரோனா ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள சுமார் 260 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

துறையூர் சமூக மட்ட அமைப்புக்கள், சமூக ஆர்வலர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் பங்களிப்புடன் இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம)

கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு, தொல்புரம் வழக்கம்பரை அம்பாள் அறக்கட்டளை நிதியத்தால் தலா ஆயிரம் ரூபா பெறுமதியுடைய உணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (ம)





நாட்டில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண சூழ்நிலையால் வாழ்வாதாரங்களை இழந்து நிர்க்கதியாகியுள்ள ஏழை எளியவர்களுக்கு உதவும் முகமாக சுமார் 500க்கும் அதிகமான உணவுப் பொதிகள் பம்பலப்பிட்டி அரச தொடர்மாடி மனையில் வசிப்பவர்களால் வழங்கப்பட்டது. பம்பலப்பிட்டி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கு இந்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.


# உலகம் மாசுபடுதல் கொரோனாவால் குறைவு

கொழும்பு, ஏப்.14

கொரோனா வைரஸ் தொற்று உலகம் முழுவதும் மிக வேகமாகப் பரவி வருவதால், இயற்கையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. இதற்கமைவாக சுற்றுச்சூழல் மாசு கணிசமாகக் குறைந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

வாகனப் பயன்பாடுகளின் குறைவு மற்றும் தொழிற்சாலைகள் மூடல் ஆகியவற்றின் காரணமாக காற்று மாசுபாடு கணிசமாகக் குறைந்துள்ளதாக நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலையில், நாசா வெளியிட்டுள்ள சமீபத்திய செயற்கைக்கோள் தரவுகளின்படி, வடகிழக்கு அமெரிக்கா முழுவதும் காற்று மாசுபாடு கடந்த சில வாரங்களில் சுமார் 30 வீதம் குறைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தச் செயற்கைக்




கோள் படம் உலகளவில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக காற்று மாசுபாடு எவ்வாறு குறைக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகிறது. உலகின் ஏனைய பகுதிகளையும் நாசா விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். 2015 முதல் 2019 மார்ச் வரையிலான காலகட்டத்தில் காற்று மாசுபாட்டை இந்த படம் காட்டுகிறது. (ட-114)



# மே 3ஆம் திகதிவரை இத்தாலியில் ஊரடங்கு

உரோம், ஏப். 14
கொரோனாத் தொற்றும் பலி எண்ணிக்கையும் குறைவடையாததை அடுத்து இத்தாலியில் மே மாதம் 3ஆம் திகதி வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் இத்தாலி மூன்றாவது இடத்தில் உள்ளது. அங்கு சுமார் ஒரு லட்சத்து 60 ஆயிரம் பேர் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 20 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் நிலமை மேலும் தீவிரமாகாமல் இருப்பதற்காக இத்தாலியில் எதிர்வரும் 3ஆம் திகதிவரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம)

# நம்பிக்கை பரப்பும் தூதராக இருங்கள்!



## உலகத் தலைவர்களுக்கு பாப்பரசர் அறிவுரை


உரோம், ஏப்ரல் 14
உலக நாடுகளின் தலைவர் தத்தம் மக்களுக்கு நம்பிக்கையைப் பரப்பும் தூதர்களாக இருக்க வேண்டும். அழுத்தத்துக்கும், அச்சத்துக்கும், பதற்றத்துக்கும் அவர்களை உள்ளாக்கக்கூடாது என்று தெரிவித்துள்ளார் பாப்பரசர் பிரான்சிஸ்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
'பலருக்கும் இந்த ஈஸ்டர் பண்டிகை தனிமையை அளித்திருக்கிறது. இந்தக் கொரோனா வைரஸ் பெருந்தொற்று மக்களுக்கு சோகத்தையும், கடினமான வாழ்க்கைச் சூழலையும் அளித்துள்ளது. அது உடல்ரீதியான சிரமங்களையும், பொருளாதாரப் பிரச்சினைகளையும் அளித்திருக்கிறது. இந்த நேரத்தில் நான் உலகிற்கு சொல்ல விரும்பும் செய்தி, அனைவரும் வேற்றுமை, சுயநலம், பிரிவினை அனைத்தையும் மறந்து நம்பிக்கையுடன் ஒன்றாக சேர வேண்டும். இந்த நேரத்தில் இதுபோன்ற வார்த்தைகளைக் கேட்க வேண்டாம்.
இப்போது எமக்கு நம்பிக்கையின் தொற்று ஒவ்வொருவரின் மனதிலிருந்தும் மற்றொருவர் மனதுக்குச் செல்ல வேண்டும். மக்களுக்காக அத்தியாவசியப் பணிகளில் இருக்கும், அர்ப்பணிப்பு கொண்டவர்கள், பொலிஸார், இராணுவத்தினர், மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள் அனைவரும் மக்களின் சிரமங்களையும், வேதனைகளையும் குறைத்து வருகிறார்கள். அவர்களுக்கு வாழ்த்துகள்.
தனிமைப்படுத்துதல் மூலம் ஏராளமானோர் வீடுகளில் தனிமையில் இருக்கிறார்கள். இது சிந்திப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தையும், வாழ்க்கையின் வெறித்தனமான வேகத்திலிருந்து சற்று இடைநிறுத்தி அன்பானவர்களுடன் வாழ்க்கையை அனுபவிப்பதற்கான வாய்ப்பையும் வழங்கியுள்ளது.
உலகம் முழுவதும் உடனடியாக போர்கள் முடிவுக்கு வர வேண்டும். சிரியா, ஏமன், ஈராக், லெபனான் ஆகிய நாடுகளில் நிலவும் முரண்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். கொரோனாவால் பாதிக்கப்பட்ட பல்வேறு நாடுகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள், பொருளாதாரத் தடைகள் தளர்த்தப்பட வேண்டும். ஏழை நாடுகளின் கடன்களைக் குறைக்கவோ அல்லது தள்ளுபடி செய்யவோ வேண்டும்- என்றார். (ம)



# வீடுகளுக்குத் தேடிச் சென்று கொரோனா பரிசோதனைகள்!

*அமீரகம் அறிவிப்பு*

அபுதாபி, ஏப். 14
சிறப்புத் தேவையுடையவர்களின் வீடுகளுக்குத் தேடிச் சென்று கொரோனா பரிசோதனைகள் செய்யப்படும் என்று அறிவித்துள்ளார் அமீரகத்தின் பட்டத்து இளவரசர் ஜாயித்.
இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
அமீரகத்தில் வேகமாக பரவும் 'கொரோனா' வைரசை கட்டுப்படுத்த அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக அபுதாபியில் ஏற்கனவே பல்வேறு பகுதிகளில் 'கொரோனா' பரிசோதனை மையங்கள் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளன. நடமாடும் மையங்களும் செயற்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறு பல்வேறு இடங்களில் 'கொரோனா' பரிசோதனை மையங்கள் அமைக்கப்பட்டாலும், மாற்றுத்திறனாளிகள் நேரடியாக அங்கு வந்து பரிசோதனை செய்வதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே மாற்றுத்திறனாளிகளின் நலனை கருத்தில் கொண்டு அவர்களது வீடுகளுக்கே சென்று மருத்துவ பரிசோதனை செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றுள்ளது. (ம)



# காலவரையறையில்லாமல் ஊரடங்கு நீடிக்கப்பட்டது!

**சவூதி அதிரடி**

ரியாத், ஏப். 14
கொரோனா வைரஸ் மிகத் துரிதமாகப் பரவி வருவதையடுத்து, காலவரையின்றி ஊரடங்கு உத்தரவை நீடித்தது சவூதி அரேபியா.
கொரோனா வைரஸால் உலகில் 210க்கும் அதிகமான நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. சவூதியில் சுமார் 4 ஆயிரத்து 500 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 60 பேர் உயிரிழந்துள்ளனர். உச்சக்கட்டமாக நேற்று முன்தினம் மட்டும் 429 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் சவூதியில் கொரோனா வேகமாகப் பரவுவதற்கு வாய்ப்பு உள்ளது என்று கருதப்படுகின்றது. இந்த நிலையில் கால வரையறையின்றி ஊரடங்கு உத்தரவை நீடித்தது சவூதி அரேபியா. (ம)

# பிணப் பைகளுக்கு கடும் தட்டுப்பாடு!

லண்டன், ஏப். 14
கொரோனா பலி எண்ணிக்கை அதிகரிப்பால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கான பைகளுக்கு தற்போது லண்டன் முழுவதும் கடும் தட்டுப்பாடு நிலவுகிறது.
இங்கிலாந்து தலைநகர் லண்டனில் கொரோனாவுக்கு பலியானோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தவாறு உள்ளது. இது, அந்த நாட்டின் பொது சுகாதாரத்துறைக்கு பல்வேறு நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில், கொரோனாவுக்கு பலியானோரின் உடல்களை அடக்கம் செய்வதற்கான பிணப் பைகளுக்கு லண்டனில் கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)





# நலமுடன் போரிஸ்

லண்டன், ஏப். 14
பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் கொரோனாவில் இருந்து நலம் பெற்று வீடு திரும்பினார் என்று பிரதமர் அலுவலகம் அறிவித்தது.
பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்தார். இதையடுத்து அவர் பிரதமர் அலுவலகத்திலேயே தனிமைப் படுத்தப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். அவரின் உடல்நிலை திடீரென மோசமடைந்ததை அடுத்து அவர் லண்டன் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு அங்கு அதிதீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். இந்த நிலையில் கொரோனாவில் இருந்து விடுதலைபெற்ற அவர் நேற்றுமுன்தினம் வீடு திரும்பினார். (ம)

# பாகிஸ்தான் கிரிக்கெட்டில் நேர்மைக்கு இடமில்லை

## பட் அதிருப்தி

இஸ்லாமபாத், ஏப். 14
பாகிஸ்தான் கிரிக்கெட்டில் நேர்மைக்கு இடமில்லை - என்று தெரிவித்துள்ளார் ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் சிக்கித் தடை பெற்றவரான பட்.
பட் மேலும் தெரிவித்ததாவது:
பாகிஸ்தான் கிரிக்கெட்டில் நேர்மைக்கு இடமில்லை. சில வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தாத நிலையிலும் அணியில் சேர்க்கப்பட்டனர். இது ஊழலில் இருந்து வேறுப்பட்டதாகுமா? - என்றார். (ம)





# ஐ.பி.எல் தொடரை மறந்து விடுங்கள்!

## கங்குலி யதார்த்தப் பேச்சு

புதுடெல்லி, ஏப்ரல் 14
உலகில் எந்தவொரு மக்களின் வாழ்க்கையும் நிர்க்கதியாகி இருக்கும் நிலையில் விளையாட்டுக்கு ஏது எதிர்காலம். இதனால் ஐ.பி.எல் தொடரைப் பற்றி சிந்திப்பதை மறந்து விடுங்கள் என்று தெரிவித்துள்ளார் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் கங்குலி.
இது தொடர்பில் கங்குலி மேலும் தெரிவித்ததாவது:
நிலைமையை நாங்கள் தொடர்ந்து உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம். தற்போதைய சூழலில் ஐ.பி.எல். குறித்து சொல்வதற்கு எதுவும் இல்லை. விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. மக்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கி கிடக்கிறார்கள். யாரும் எங்கும் செல்ல முடியவில்லை. இதே நிலைமை மே மாதத்தின் இறுதி வரை போகும் என்று தோன்றுகிறது.
இத்தகைய நிலைமையில் வீரர்கள் எங்கிருந்து வருவார்கள். அவர்கள் எப்படி பயணம் மேற்கொள்வார்கள். இது போன்ற விடயங்களை நாம் எளிதில் புரிந்து கொள்ள முடியும். உலகின் எந்த விளையாட்டுக்கும் இப்போது சாதகமான சூழ்நிலை இல்லை. ஐ.பி.எல். போட்டியை மறந்து விடுங்கள்.
இந்திய கிரிக்கெட் வாரியத்தின் மற்ற நிர்வாகிகள், அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்த பிறகு ஐ.பி.எல். தொடர் குறித்த உறுதியான தகவலை விரைவில் அறிவிப்பேன். யதார்த்தமாக பேச வேண்டும் என்றால் கொரோனாவால் உலகில் எல்லோருடைய வாழ்க்கையும் நிர்க்கதியாகி இருக்கும்போது, விளையாட்டுக்கு ஏது எதிர்காலம்? - என்றார். (ம)

# ‘ரோகித் எங்கே?’

விஸ்டன் பட்டியலில் ரோகித் சர்மாவின் பெயர் ஏன் இடம்பெறவில்லை? என்று கேள்வி எழுப்பியுள்ளார் இந்திய அணியின் முன்னாள் வீரர் லக்ஷ்மன்.
கிரிக்கெட்டின் பைபிள் என்று வர்ணிக்கப்படுகின்றது விஸ்டன் பத்திரிகை. இந்தப் பத்திரிகை ஆண்டு தோறும் சிறந்த வீரர்களைத் தெரிந்தெடுத்துக் கௌரவித்து வருகின்றது. இந்த வருடத்தின் சிறந்த வீரராக ஸ்ரோக்ஸைத் தெரிவு செய்திருந்தது. அந்தப் பட்டியலில் ரோகித் இடம்பெறவில்லை. இது தொடர்பில் லக்ஷ்மன் தெரிவித்ததாவது:
விஸ்டனின் பட்டியலில் ரோகித் சர்மா பெயர் இல்லாதது கிரிக்கெட் போட்டியை பார்க்கும் ஒவ்வொருவருக்கும் ஆச்சர்யமாகவும், அதிர்ச்சியாகவும் இருக்கும் என நினைக்கிறேன். ஆஷஸ் தொடர் முக்கியமானதுதான். அதைவிட உலகக்கிண்ணம் மிகப்பெரியது. ஒருவர் ஐந்து சதம் அடித்துள்ளார். ஆனால் அவரின் பெயர் இடம்பெறவில்லை. என்ன இது? - என்றார். (ம)



# விம்பிள்டனில் விளையாடுவார் வில்லியம்ஸ்!

லண்டன், ஏப். 14
மிகப்பெரும் ரென்னிஸ் தொடரான விம்பிள்டனில் அடுத்த வருடம் செரீனா வில்லியம்ஸ் விளையாடுவார் என்று தெரிவித்துள்ளது விம்பிள்டன் ஏற்பாட்டுக் குழு.
விம்பிள்டன் தொடர் விரைவில் தொடங்குவதாக இருந்தது. ஆனால் பிரிட்டனில் கொரோனா அச்சுறுத்தல் மிகையாகி உள்ளதால், இந்த வருடத்துக்கான தொடர் கைவிடப்பட்டுள்ளது. அடுத்த வருடம் நடைபெறும் தொடரில் செரீனா வில்லியம்ஸ் விளையாட வாய்ப்பில்லை. அவர் ஓய்வு அறிவித்து விடுவார் என்று தெரிவிக்கப்படும் நிலையில், அடுத்த வருடம் செரீனா விளையாடுவார் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளது விம்பிள்டன் ஏற்பாட்டுக் குழு.
‘அடுத்த ஆண்டு விம்பிள்டன் தொடர் உற்சாகம் மிகுந்ததாக நடைபெறும். இந்த ஆண்டு துரதிஸ்டவசமாக ஆட்டம் கைவிடப்பட்டுள்ளது. இதனால் அடுத்த ஆண்டுத் தொடரில் ஏகப்பட்ட எதிர்பார்ப்புக்கள் உள்ளன. இந்தத் தொடரில் செரீனா விளையாடுவார்’ - என்றார். (ம)



# உலகக்கிண்ணத் தொடருடன் ஓய்வு பெற்றிருக்க வேண்டும்!

## டோனி தொடர்பில் அக்தர் பேச்சு

உலகக் கிண்ணத் தொடருடன் டோனி ஓய்வு பெற்றிருக்க வேண்டும். அவரால் உலகக் கிண்ணத் தொடரில் அரையிறுதியில் இந்திய அணியை வெற்றிபெற வைக்க முடியவில்லை இவ்வாறு தெரிவித்தார் பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர் அக்தர்.
இது தொடர்பில் அக்தர் மேலும் தெரிவித்ததாவது:
டோனி தனது திறமைக்கு ஏற்ப இந்திய அணிக்கு சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளார். அவர் உரிய மரியாதையுடன் கிரிக்கெட்டில் இருந்து விடைபெற வேண்டும். ஓய்வு விஷயத்தில் அவர் நீண்ட நாட்கள் இழுத்தடித்து வருவது ஏன்? என்று எனக்கு தெரியவில்லை. கடந்த ஆண்டு நடந்த உலகக் கிண்ணத் தொடருடன் அவர் ஓய்வு பெற்றிருக்க வேண்டும். அவருடைய இடத்தில் நான் இருந்திருந்தால், அப்போதே ஓய்வு பெற்று இருப்பேன். நான் குறுகிய வடிவிலான போட்டியில் மேலும் 3 முதல் 4 ஆண்டுகள் விளையாடி இருக்கலாம். ஆனாலும் நான் 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடருடன் விலகினேன். 100 சதவீத ஆட்டத்தை வெளிப்படுத்த முடியாது என்பதை உணர்ந்ததால் ஏன் இழுத்தடிக்க வேண்டும் என நினைத்து ஓய்வு முடிவுக்கு வந்தேன்.
இந்தியாவுக்காக உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்ததுடன், பல்வேறு மகத்தான சாதனைகளை டோனி செய்திருக்கிறார். ஒரு நாடாக சிறந்த வீரரான அவரை மதிப்புடனும், மரியாதையுடனும் அனுப்ப வேண்டியது அவசியம். உரிய மரியாதையுடன் அவருக்கு பிரியாவிடை கொடுக்க வேண்டும். அவர் அருமையான மனிதநேயம் மிக்கவர் - என்றார். (ம)



# கோலியின் சாதனைகளை முறியடிப்பார் பாபர் அசாம்

## ரமீஸ் ராஜா சொல்கின்றார்

இஸ்லாமபாத், ஏப்.14
விராட் கோலியின் சாதனைகளை பாகிஸ்தான் அணியின் முன்னணி வீரர் பாபர் அசாம் முறியடிப்பார் என்று தெரிவித்துள்ளார் ரமீஸ் ராஜா.
சச்சினின் சாதனைகளை கோலி முறியடிப்பார் என்ற கருத்துக் கணிப்புக்கு ஏற்ப கோலி மிகச் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றார். தற்போது கோலியின் சாதனைகளை அசாம் முறியடிப்பார் என்று பலரும் கணித்துள்ளனர். ரமீஸ் ராஜாவும் அதே கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.
விராட் கோலியின் சாதனையைக்கூட முறியடிக்கும் சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆனால் பாபர் அசாம் அவரது மனதை எளிமையாக்கி, தோல்வி குறித்து சிந்திக்காமல் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினால் கோலியின் சாதனையை அசாமால் முறியடிக்க முடியும் - என்றார். (ம)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற் லிமிட்ரெட் நிறுவத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.04.2020இல் வெளியிடப்பெற்றது.